# ஸலவாத்து மாலை

அகத்திமுறிப்பான்



இலுஹாறுல் முஃஜிஸாத்
பீஸலாத்தி அஸ்றபில்
மௌஜூதாத்

றஹ்மத்துல்லாஹ் புத்தகசாலை
பிரபல அறபிக் தமிழ் சமய புத்தக வியாபாரிகள்
கிண்ணியா - 01.
தொலை பேசி: 026 - 36243

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை:

நஷ்றத்துல்லாஹ் புத்தகசாலை
கிண்ணியா - 01.

8ம் பதிப்பு 1997

அல்லாஹுத்த ஆலா, தன்னுடையரசூலின் மீதும் ஈமான் கொண்டவர்கள் மீதும் ஸகீனா என்னும் சுவர்க்கத்தின் பாக்கியம் நிறைந்த ஆறு தலையும், அமைதியையும் இறக்கி வைத்து பரிசுத்த வாக்கியமான (கலிமாவின்) மீது அவர்களை உறு திப்படுத்தினான் அவர்கள் அதற்கு மிகத் தகுதி யுடையவர்களாகவும், அவர்களே அதனை அடைய வேண்டியவர்களாகவும் இருந்தார்கள்

(அல் குர் ஆன் 48 26)

எவர்சைன் அச்சகம் கிண்ணியா - 03.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

12/50

# ஸலவாத்து மாலை

இலுஹாறுல் முஃஜிஸாத்
பீஸலாத்தி அஸ்றபில
மௌஜூதாத்

அகத்திமுறிப்பான்

ஆசிரியர்:

காத்தான்குடியைச் சேர்ந்த
மர்ஹூம் ஜனாப் ஹஜ்ஜி முஹம்மது ஹாஜி
இபுனு அஹமது லெவ்வை

RAHUMATHULLAH BOOK SHOP

*ARABIC RELIGIOUS*
*&*
*TAMIL BOOK SELLERS*
**KINNIYA - 01.**
*T. P. 026 - 36243*

ஹாதி புத்தக நிலையம்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை:

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின திருநாமத்தால் . . .

உங்கள் கையில் இருக்கும் இந் நூல் நாயகம் (ஸல்) மீது ஸலவாத்துச் சொல்லும் பாடல்களை உள்ளடக்கியுள்ளது

'' நிச்சயமாக அல்லாஹ்வும், அவனது மலக்குகளும் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கின்றனர். எனவே மூஃமீன்க ள நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்'' என்பது அல்குர்ஆனின் கருத்து.

இத் திருமறை வசனத்துக்கமைய நாயகம் (ஸல்) மீது ஸலவாத்துச் சொல்லி அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்குக்கு அமையவே இந்நூலை மறுபதிப்புச் செய்துள்ளோம்.

எனவே, நாம் அனைவரும் நாயகம் ( ஸல் ) மீது அதிக ஸலவாத்துக்களை சொல்லி அனேகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்வோமாக

**மௌலவி: அல் - ஹாஜ் கே. எம். எச். அப்துல்காதர்**

**றஹ்மத்துல்லாஹ் புத்தகசாலை**

**கிண்ணியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸலவாத்து

## முதலாம் பாகம்

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்
யாறப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம் அல்

1. ஆதியில் பிஸ்மியும் ஹம்தும் சொல்ல
அருளினார் அண்ணல் நபி முஹம்மத் அல்

2. அல்ஹம்து லில்லாஹி என்றுரைத்தார்
அவ்வலில் ஆதம் அபூ முஹம்மத் அல்

3. சொல்லும் ஸலவாத்தும் ஸலாமும் நித்தம்
தூய்யவன் நன் நபிக்காம் முஹம்மத் அல்

4. எல்லா நபிகளுக்கும் இமாமாம்
இறையருள செய்தினா முஹம்மத் அல்

5. சங்கை றசூலுடன் ஆல் சஹாபா
சாதாத்தையும் புகழ்வோம் முஹம்மத் அல்

6 அபூபக் கருமறு துமான் அலியை
சஹா பாக்களைப் புகழ்வோம் முஹம்மத் அல்

7. நம்மள் நபியவர்கள் நம்பிராட்டி
நாச்சியரைப் புகழ்வோம் முஹம்மத் அல்

8. நபியின் மனைவியாரைப் பணிந்து
நாமங்களை யுரைப்போம் முஹம்மத் அல்

9. மாதர்க் கரசியராம் கதிஜாவும்
மங்கையர் ஆயிஷத்தாம் முஹம்மத் அல்

10. ஹப்சாவும் செளதாவும் மனைவியர்
ஜெய்நப்பு நாச்சியாராம் முஹம்மத் அல்

11. உம்மு ஹபீபாவும் உம்மு ஸல்மா
உண்மை சபியாவாம் முஹம்மத் அல்

12. அஸ்மாவும் மைமுனத்தும் ஜுவைறாவும்
அம்றத்தும் ஹெளலத்துமாம் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. உம்றத்தும் உம்குறை ஸறாபும்
ஸபியாவும் ஆலியாத்தாம் முஹம்மத் அல்

14. பதீலாவும் லைலாவும் ஜெய்நம்பும்
பத்தினி மங்கையர்கள் முஹம்மத் அல்

15. மானின் பிணையாய் நின்ற எங்கள் நபி
மக்களையும் பணிவோம் முஹம்மத் அல்

16. பாத்திமா நாயகியைப் பணிந்து
ஹசன் ஹுசைனைப் புகழ்வோம் முஹம்மத் அல்

17. தையுபும் தாஹிறுமாம் இபுறாஹீம்
காசிமும் புத்திரராம் முஹம்மத் அல்

18. பாத்திமா உம்முகுல் தூம் றுகையாவும்
ஜெய்நம்பும் புத்திரியாம் முஹம்மத் அல்

19. முத்திதரும் குதுபு ஒலிமார்
முஸ்லீங்களைத் துதிப்போம் முஹம்மத் அல்

20. அண்ணல் நபிபேரில் ஸலவாத்தை
அல்லா உரைத்தவர்காண் முஹம்மத் அல்

21. அல்லாவின் அமரர்கள் ஸலவாத்தை
அழகா யுரைத்தவர்காண் முஹம்மத் அல்

22. அடியாரும் சொல்லுமென்று ஸலவாத்து
அல்லாவின் கட்டளையாம் முஹம்மத் அல்

23. நாயனின் கட்டளைபோல் ஸலவாத்தை
நன்றியுடனுரைப்போம் முஹம்மத் அல்

24. றஹ்மத்தன் லில் ஆலமீன் குர் ஆனில்
றஹ்மானுரைத்தவர்காண் முஹம்மத் அல்

25. ஆலத்தா ரெல்லோர்க்கும் றஹ்மத்தாய்
அல்லா அனுப்பிவைத்தான் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. எந்த து ஆக்களிலும் ஸலவாத்து
எல்லோரும் சொல்லுமென்றார் முஹம்மத் அல்

27. ஸலவாத்தைப் போலொன்றில்லை நபிச்கு
சங்கையாய்ச் சொல்லுமென்றார் முஹம்மத் அல்

28. தொழுகையில் ஸலவாத்து பறுளும்
அப்ஆலு சுன்னத்துமாம் முஹம்மத் அல்

29. சொல்லுவோம் தீனோரே ஸலவாத்தைச்
சுவர்க்கம் கிடைக்குமென்றார் முஹம்மத் அல்

30. எப்போதுஞ் சொல்லிடுவோம் ஸலவாத்தை
ஈமான் ஸலாமத் துண்டாம முஹம்மத் அல்

31. ஒருநாள் ஸலவாத்தால் நம் ஹாஜத்து
ஒரு நூறு தீருமென்றார் முஹம்மத் அல்

32. எண்ணி முடியாது ஸலவாத்தால்
ஈடேற்றம் பெற்றவர்கள் முஹம்மத் அல்

33 நபிகள் பெயர்தன்னைக் கேட்ட நண்பர்கள்
நன்றாய் ஸலவாத்துரைப்பீர் முஹம்மத் அல்

34. நேமமாய்ச் சொல்லிவந்தால் ஸலவாத்தை
நெயினா ருதவியுண்டாம் முஹம்மத் அல்

35 சங்கை ஸலவாத்தாம் எங்கள் நபி
தாஹாவைப் போற்றிச் சொல்வோம் முஹ அல்

36. றஹ்மத்துப் பெற்றிடலாம் ஸலவாத்தை
நன்றாகச் சொல்லுமென்றார் முஹம்மத் அல்

37. எந்தன் ஸலாத்தைச் சொல்வோர்கள்
எண்ணுரித் தாளரென்றார் முஹம்மத் அல்

38. சஞ்சலம் நீங்கிடுமாம் ஸலவாத்தைச்
சத்தமாய்ச் சொன்னவர்க்காம் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. மார்க்கப்படி நடந்தால் ஸலவாத்தால்
மன்றாட்டஞ் செய்வேனென்றார் முஹம்மத் அல்

40. உண்மை ஸலவாத்தால் நமக்கு
உடையோனு கிருபை செய்வான் முஹம்மத் அல்

41. ஸலவாத் துரையாதோர் என் மீதினில்
சண்டாள ரென்றுசென்னார் முஹம்மத் அல்

42. முத்துநபி ஸலவாத் துரையாதோர்
மூதேவி என்று சொன்னார் முஹம்மத் அல்

43 ஸலவாத்துச் சொன்னோர்க்கு சபா அத்து
நான் செய்வேனென்றுரைத்தார் முஹம் அல்

44. ஹாசிம் குலத்தில்வந்த எங்கள் நபி
தாசீனும் யாசீனும் முஹம்மத் அல்

45. யானைப் படைவரும் எங்கள் நபி
தாயின் வயிற்றினிலாம் முஹம்மத் அல்

46. அப்துல்லா புத்திரராம் எங்கள் நபி
ஆமீனார் பாலகராம் முஹம்மத் அல்

47. மக்கந்தனில் பிறந்தார் எங்கள் நபி
மங்காத மாணிக்கமாம் முஹம்மத் அல்

48. சுவர்க்கம் திறந்ததுவாம் எங்கள் நபி
துய்தாய்ப் பிறந்தனர்காண் முஹம்மத் அல்

49. நரகம் அடைந்ததுவாம் எங்கள் நபி
நெயினார் பிறந்ததினம் முஹம்மத் அல்

50. மாதம் றபிஉல் அவ்வல் பனிரெண்டில்
மன்னர் நபி பிறந்தார் முஹம்மத் அல்

51. திங்கட்கிழமை பிறந்தார் எங்கள் நபி
செய்யிது அஹமதுவாம் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. திங்கட்கிழமைதனில் நபியென்னும்
பட்டம் தரித்தவர்கள் முஹம்மத் அல்

53. திங்கட்கிழமைதனில் மக்காவைப்
பிடித்த நபிபெருமான் முஹம்மத் அல்

54. திங்கட்கிழமைதனில் மிஃறாஜி
யாத்திரை சென்றவர்காண் முஹம்மத் அல்

55. திங்கட்கிழமைதனில் ஹிஜறத்துச்
சென்ற நபியவர்காண் முஹம்மத் அல்

56. திங்கட்கிழமை தனில் மதீனா
நகரம் புகுந்தவர்காண் முஹம்மத் அல்

57. திங்கட்கிழமைதனில் சுவர்க்கப்பதி
சேமமாய் சேர்ந்தவர்காண் முஹம்மத் அல்

58. திங்கட்கிழமைதனில் அநேகம்
சிறப்புக்கள் கண்டவர்காண் முஹம்மத் அல்

59. தெய்வ வணக்கம் செய்ய ஹிறாக்குகை
சென்று இருக்கையிலே முஹம்மத் அல்

60. நாற்பது வயதினிலே நபிப்பட்டம்
வந்த நபியவர்காண் முஹம்மத் அல்

61. காரணக் கடலானோர் எங்கள் நபி
கஸ்தூரி மேனியராம் முஹம்மத் அல்

62. ஏகன் ஸலாமுரைத்தான் றசூலுக்கு
எல்லாம் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

63. மண்ணும் ஸலாமுரைத்த குருநபி
விண்ணும் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

64. மதியும் ஸலாமுரைத்த றசூலுக்கு
மலையும் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. அருகும் ஸலாமுரைத்த ஹபீபுக்கு
குருசும் ஸ்லாமுரைத்தோர் முஹம்மத் அல்

66. வௌஹூம் ஸலாமுரைத்த ஹக்கன் நபி
கலமும் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

67. உடும்பும் ஸலாமுரைத்து நபிக்கு
ஓனாய் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

68. மாடும் ஸலாமுரைத்து அவர்கட்கு
ஆடும் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அத்

69 சிங்கம் கரடி புலி முயலுஞ்
சிறப்பாய்ச் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

70 மானும் ஸலாமுரைத்த றசூல் நபி
மரமும் ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

71. பார்த்து நபிமுகத்தை ஒட்டகம்
பணிந்து ஸலாமுரைத்தோர் முஹம்மத் அல்

72. இருளையகற்ற வைத்தோர் உலகினில்
ஒளியைத் துவக்கிவைத்தோர் முஹம்மத் அல்

73. தீன் பயிரை விதைத்துப் புவியினில்
ஜெயம் பெற்ற வள்ளலுமாம் முஹம்மத் அல்

74. ஏட்டி லடங்காது புதுமைகள்
எண்ணி முடியாது முஹம்மத் அல்

75. காரணம் சொல்வதற்குக் கரையில்லை
ஹக்கன் நபியேறசூல் முஹம்மத் . அல்

76 கல்பு இரங்கிடுவோர் எவரையும்
காப்பாற்றும் நபியிறசூல் முஹம்மத் அல்

77. எந்த வகுப்பாரையும் எங்கள் நபி
ஏற்றமாய் ஆதரிப்பார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. ஏழையும் சிமானும் எங்கள் நபிக்
கெல்லோரும் ஒன்றுபோலாம் முஹம்மத் அல்

79. அனியாயம் செய்தோரை எங்கள் நபி
அன்புடன் ஆதரிப்போர் முஹம்மத் அல்

80 ஓரிரவில் கடந்தார் வானெழையும்
உண்மை நபியவர்கள் முஹம்மத்

81. மன்னோன் முடிசூட்டி யனுப்பிய
மஹ்மூது நாயகராம் முஹம்மத் அல்

82. பார்த்தவுடன் மரங்கள் நபிக்குப்
பழங்கள் கொடுத்திடுமாம் முஹம்மத் அல்

83. சாமூருப் பட்டணம் போய் வரும்போது
சங்கை நபியவர்கள் முஹம்மத் அல்

84 கல்லிற் புகுந்திருந்த சுரத்தை
களட்டிப் பொருந்தினர்காண் முஹம்மத் அல்

85 பட்டதோர் ஈத்தங்குத்தி அவர்களைப்
பார்த்து அழுததுகாண் முஹம்மத் அல்

86 ஈத்தம்பழக் குலையை விரும்பி
இங்குவாவென்றழைத்தோர் முஹம்மத் அல்

87. அன்று பிறந்தபிள்ளை நபியுடன்
அழகாகப் பேசினர்காண் முஹம்மத் அல்

88. பட்டமரந் தழைத்தோர் தண்ணீரில்
படலைக்கல்லை யழைத்தோர் முஹம்மத் அல்

89. சந்திரனை யழைத்துப் பிளந்து
சலாத்துடன் பேசவைத்தோர் முஹம்மத் அல்

90. அடைந்த பொழுதுதன்னை உலகில்
திரும்ப வரவழைத்தோர் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. வலது கரத்தினால் மண்ணைவீசி
பதுறுனில் வெற்றிபெற்றார் முஹம்மத் அல்

92. ஈத்தமர மட்டையை உக்காசிக்கு
இலங்கிடும் வாளாக்கினோர் முஹம்மத் அல்

93. ஐந்து விரலினின்றும் தண்ணீரை
அழைத்துக் கொடுத்தவர்காண் முஹம்மத் அல்

94. மல்யுத்தஞ் செய்யவந்த அபுஜஹிலை
மண்ணில் லெறிந்தவர்காண் முஹம்மத் அல்

95. நாவினாற் சொல்வதெல்லாம் எங்கள் நபி
நாயன்சொற் கட்டளையாம் முஹம்மத் அல்

96 ஊசிவிழ இரவில் ஆயிசா
எடுத்தார் நபி ஒளியால் முஹம்மத் அல்

97. முன்னாலே காண்பதுபோல் எங்கள் நபி
பின்னாலுங் காண்பவர்காண் முஹம்மத் அல்

98. அற்புதங்கள் மிகுதம் உரைக்க
அறிவில்லை யார்தனக்கும் முஹம்மத் அல்

99. புண்ணியர் நம்மிறசூல் பூலோகம்
புகழ்பெற்ற நயகராம் முஹம்மத் அல்

100 நாயனுக்குப் பயந்து நடக்க
நபியைப்போல் யாருமில்லை முஹம்மத் அல்

101. எப்பொழுதும் எங்கள் நபி என் உம்மத்து
என்று நினைப்பவர்காண் முஹம்மத் அல்

102. நாளைக்கியாமத்தினில் எங்கள் நபி
நாயகன் சமூகத்திலே முஹம்மத் அல்

103. எந்தன் றகுமானே என்றப்பு
என்உம்மத் தென்றே அழுவார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. மற்றும் நபிமார்கள் கியாமத்தில்
நப்சினப் சென்றழுவார் முஹம்மத் அல்

105. இம்மை மறுமையிலும் எங்களுக்கு
இடையூறைக் காத்தருள்வார் முஹம்மத் அல்

106. எங்கள் பிணியகற்றித் துயரங்கள்
எல்லா மகற்றிவைப்பீர் முஹம்மத் அல்

107. கஷ்டங்கள் நீக்கிவைப்பீர் ஹபீபே
காத்திமுல் அன்பியாவே முஹம்மத் அல்

108. பாவப் பிணியகற்றிப் பாவிகளைப்
பரகதி சேர்த்துவைப்பீர் முஹம்மத் அல்

109. தீனோர்களெல்லோர்க்கும் சபா அத்து
செய்து அருள்புரிவீர் முஹம்மத் அல்

110. அஹமது நன்னபியை நான்பார்த்து
நாட்டங்கள் தீர்வதெப்போ முஹம்மத் அல்

111. றப்பனா மக்காசென்று ஹஜ்ஜி செய்யும்
பாக்கியம் தந்தருள்வாய் முஹம்மத் அல்

112 றப்பனா மதினா றசூல் றவுழாவை
பார்க்கக் கிருபை செய்வாய் முஹம்மத் அல்

113. ஹைறான ஹாஜத்துகள் நிறைவேற்றிக்
கருணை புரிந்தருள்வாய் முஹம்மத் அல்

114. நாள்தோறும் நாட்டம் வைத்து அழுகிறேன்
நம்பினேன் காலமெல்லாம் முஹம்மத் அல்

115. உருகிறேன் இரவுபகல் மொழுகுபோல்
உங்களைக் காண்பதற்கு முஹம்மத் அல்

116. எண்ணித் தொலையாது என்பாவ
மகற்றிக் கிருபை செய்வீர் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117. மார்க்க விரோதஞ்செய்த இப்பாவியை
மறுமையில் காத்தருள்வீர் முஹம்மத் அல்

118. பாவமெனுங்கடல் நீரில் மூழ்கிய
பாவியைப் பார்த்தருள்வீர் முஹம்மத் அல்

119. பாடத்தெரியாதோன் இப்பாவியைப்
பார்த்துப் பிழைபொறுப்பீர் முஹம்மத் அல்

120. கல்வி சிறிதுமிலான் இப்பாவியைக்
காத்துக் கிருபைசெய்வீர் முஹம்மத் அல்

121. படிப்போர்க்கும் கேட்போர்க்கும் கிருபைசெய்
பத்தாஹூ யாறஹ்மான் முஹம்மத் அல்

122. பக்தியுடன் படித்தா விதனால்
பலனுண்டு எங்களுக்கு முஹம்மத் அல்

123. கெஞ்சி இதை ஓதிக் கேட்டோர்க்கு
கிருபைசெய்வாய் றஹ்மான் முஹம்மத் அல்

124. மௌத்து வருத்தங்களை நீ லேசாக்கு
வல்லவா உன்துணையே முஹம்மத் அல்

125. சக்கறாத்தினிற் கலிமாவை ஓதிட
சக்தியைத் தா றஹ்மான் முஹம்மத் அல்

126. பீசபீலில் மௌத்தானோர் கூட்டத்தில்
பெரியோனே சேர்த்துவைப்பாய் முஹம்மத் அல்

127. கபுறில் வருங்கஷ்டம் அனைத்தையும்
காப்பாற்று யாறஹ்மான் முஹம்மத் அல்

128. பத்தான் முன்கர்நகீரின் சுவால்களை
படைத்தோனே நீயறிவாய் முஹம்மத் அல்

129. ஜவாபு நாங்கள் கொடுக்கத் துணை செய்வாய்
யாறப்பு யாறஹ்மான் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. மஹ்ஷர் வெளிதனிலே வருங்கஷ்டம்
வல்லோனே காத்தருள்வாய் முஹம்மத் அல்

131 நாயனே எங்கள் நன்மைப் பட்டோலையை
வலதுகரந் தருவாய் முஹம்மத் அல்

132 சிறாத்தல் மூஸ்தகீம் பாலங் கடத்திவை
யாறப்பு யாறஹ்மான் முஹம்மத் அல்

133. நன்மை தராசு தட்டுக் கனத்திட
நாயனேயுன் துணைதான் முஹம்மத் அல்

134. லிவாஉல் ஹம்தென்னும் கொடிநிழலில்
றப்பனா சேர்த்துவைப்பாய் முஹம்மத் அல்

135. மஹ்மூது நபியவர்கள் மன்றாட்டத்தில்
வல்லோனே சேர்த்துவைப்பாய் முஹம்மத் அல்

136. ஹௌலுல் கவ்தர் குடிப்பை நீதந்தருள்
ஹக்கனே நபிகரத்தால் முஹம்மத் அல்

137. பிர்தவ்சு சுவர்க்கம் தனிற்புகுதலை
பெரியோனே யாரஹ்மானே முஹம்மத் அல்

138. கொடிய நரகங்களின் அதாபை
ஹுதாவே நீ காத்தருள்வாய் முஹம்மத் அல்

139. மாத விடைகளில்லாத மாணிக்கம்
மக்கா நபிமகளாம் முஹம்மத் அல்

140 அறுஷிப்புலியலியார் மணஞ்செய்த
அருமை நபிமகளாம் முஹம்மத் அல்

141. பெண்கள் அனைவோர்க்கும் மன்றாடிடும்
பெரியோன் நபிகளாம் முஹம்மத் அல்

142. மாதர்கள் செய்யுங்குற்றம் மன்றாடுவோர்
வல்லோன் நபிகளாம் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

143. கண்மணி நாயகியே மன்றாடிக்
கரைசேர்ப்பீர் பாத்திமுத்தே முஹம்மத் அல்

144. சித்தினா பாத்திமுத்தே பெண்கட்கு
சிபாரிசி செய்திடுவீர் முஹம்மத் அல்

145. பாத்திமத்து ஸ்சஹ்றா பெண்கட்கு
ஷபா அத்துத் தந்தருள்வீர் முஹம்மத் அல்

146. இவர்கள் பொருட்டதினால் எங்களுக்கு
இறைவனே காத்தருள்வாய் முஹம்மத் அல்

147. றப்பனா உன்னடியார் செய்த நன்மை
செய்குற்றம் நீபொறுப்பாய் முஹம்மத் அல்

148. றப்பனா உன்னடியார் செய்த நன்மை
தீமையை நீயறிவாய் முஹம்மத் அல்

149. றப்பனா உன்சமூகம் தெரிந்தும்
தெரியாமல் பாவம் செய்தோம் முஹம்மத் அல்

150. றப்பனா எங்கள் பிழை பொறுத்திட
யாருண்டு எங்களுக்கு முஹம்மத் அல்

151. றப்பனா உன்னையெல்லாமல் றஹ்மத்து
யார்செய்வா ரெங்களுக்கு முஹம்மத் அல்

152. றப்பனா எங்களுக்கு கிருபைசெய்
ஜப்பாறு யாறஹ்மான் முஹம்மத் அல்

153. றப்பனா ரெட்சித்தருள் றஹ்மான்
யாறப்பு எங்களுக்கு முஹம்மத் அல்

154. றப்பனா உன்னருளைச் சொரிந்திடு
யாறப்பு யாறஹ்மான் முகம்மத் அல்

155. றப்னா யான்பாவி படிப்பில்லான்
பட்சம் வையாறஹ்மான் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156. றப்பனா காத்தநகர் பிறந்தோன்
கதிபு ஹுனைகலையில் முஹம்மத் அல்

157. றப்பனா ஹஜ்ஜிமுஹம்ம தென்போன்
கவலைகள் தீர் றஹ்மான் முஹம்மத் அல்

158 றப்னா உன்னடியார் தீனோர்க்கு
றஸ்ஸாக்கு நீ துணைசெய் முஹம்மத் அல்

159. றப்பனா ஏற்றுக்கொள்வாய் எங்கள் துஆ
யாஹய்யு யாகையூம முஹம்மத் அல்

160. றப்பனா வுன் றனக்குப் புகழும்
புகழ்ச்சியு முண்டாக முஹம்மத் அல்

161. றப்பனா ஸலவாத்துப் ஸலாமும்
றசூல்நபிக் குண்டாக முஹம்மத் அல்

162. றப்பனா ஸலவாத்தும் ஸலாமும்
வ ஆலிஹி தோழருக்கும் முஹம்மத்

163. றப்பனா கபூல்செய்வாய் ஆமீன்
யாறப்பல் ஆலமீன் முஹம்மத் அல்

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத
யாறப்பி ஸல்லி அலைஹிவ ஸல்லிம்

முதற்பாகம் முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பாகம்

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மது
யாறப்பி ஸல்லி அலைஹிவஸல்லிம்.

1. பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்
மேலோன் றசூல்நபியாம் முஹம்மத் அல்

2. ஆதி றகுமானை அழகாய்
அனுதினமும் புகழ்வோம் முஹம்மத் அல்

3. மதியமைத்த றசூலையும் சிளை
யார்களையும் புகழ்வோம் முஹம்மத் அல்

4. இறுதி நபியினத்தோர் சஹாபாக்க
ளெல்லோரையும் புகழ்வோம் முஹம்மத் அல்

5. கௌது குதுபொலிகள் மற்றும் பெரி
யார்களையும் நினைப்போம் முஹம்மத் அல்

6. எல்லாவஸ்தும் படைத்தான் இறைவன்
எங்கள் நபிதமக்காய் முஹம்மத் அல்

7. கோமான் எனைநபியாய் அனுப்பி
குர் ஆனும் தந்தானென்றார் முஹம்மத் அல்

8. வேதம் புறுக்கானுல் அழீமை
வெற்றியாய் தந்தானென்றார் முஹம்மத் அல்

9. என்சொல்லைக் கேட்டோர்கள் என்றப்புக்
கிணங்கிய போர்களென்றார் முஹம்மத் அல்

10. ஆலம் படைத்தவனைப் பயந்து
அழகாய் நடங்களென்றார் முஹம்மத் . அல்

11. ஈமானை ஒப்புக்கொண்டு இஸ்லாத்தை
ஏகி நடங்களென்றார் முஹம்மத் அல்

12. பகுனொரு காரியத்தை அனைவோரும்
பற்றிப் பிடிங்களென்றார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஈமானில் ஓர்பறுலு அல்லாதனை
ஏற்றுண்மை கொள்வதென்றார் முஹம்மத் அல்

14. உண்மை மலக்குகள்தான் அமரர்கள்
இரண்டாவ தாகுமென்றார் முஹம்மத் அல்

15. மூன்றாவது பறுலு ஹக்கன் திரு
வேதங்க ளாகுமென்றார் முஹம்மத் அல்

16. நாய னனுப்பிவைத்த றசூல்மார்க்கள்
நாலாவ தாகுமென்றார் முஹம்மத் அல்

17 ஐந்தாவது பறுலு ஒடுக்கத்து
நளாகு மென்றுரைத்தார் முஹம்மத் அல்

18. ஆறாவது பறுலு நன்மை தின்மை
நாயன் புறமாமென்றார் முஹம்மத் அல்

19. நலவைப் பொருந்திக்கொள்வான் ரகுமான்
கெடுதி பொந்தாவென்றார் முஹம்மத் அல்

20. அரிய இஸ்லாமின் பறுலுகள்
ஐந்தாகு மென்றுரைத்தார் முஹம்மத் அல்

21. ஒராவது கலிமா ஷஹாதத்து
உறுதியாய்ச் சொல்வதென்றார் முஹம்மத் அல்

22. இரண்டாவது பறுலு தொழுகையை
நேமமாய்ச் செய்வதென்றார் முஹம்மத் அல்

23. மூன்றாவது கொடுங்கள் ஸகாத்தை
முதலுள்ள பேர்களென்றார் முஹம்மத் அல்

24. நாலாவது றமளானின் நோன்பை
நன்றாய்ப் பிடிங்களென்றார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ஐந்தாம் பருலான ஹஜ்ஜிதனை
அழகாய் இறுங்களென்றார் முஹம்மத் அல்

26. ஆறும் ஐந்தும் எடுத்தால் என்றப்பு
அன்பைச் சொரிவானென்றார் முஹம்மத் அல்

27. மிஃறாஜியில் றஹ்மான் எனக்குக்
கொடுத்ததைக் கேளுமென்றார் முஹம்மத் அல்

28. ஆதிறஹ்மானால் கிடைத்தது
அருள் தரும் தொழுகை என்றார் முஹம்மத் அல்

29. கட்டாயச் சட்டமென்று தொழுகையை
ஹக்கன் கொடுத்தானென்றார் முஹம்மத் அல்

30. அன்புடையோனை பணிந்து நீங்கள்
அஞ்சித் தொழுங்களென்றார் முஹம்மத் அல்

31. தொழுகையைப் பேணுதலாய் எடுத்தோர்க்கு
துணைசெய்வான் றகுமானென்றார் முஹம். அல்

32. கருணைதருந் தொழுகை ஹக்கனுக்கு
காணிக்கை யாகுமென்றார் முஹம்மத் அல்

33. சோதி றஹ்மானைத் தொழுதோர்க்குத்
துன்பங்கள் திருமென்றார் முஹம்மத் அல்

34. கூடிஜமா அத்துடன் தொழுவோர்க்கு
கோமான் கிருபையென்றார் முஹம்மத் அல்

35. இமாமத்துடன் தொழுதால் இருபத்தி
ஏழுதறஜா வென்றார் முஹம்மத் அல்

36. தொழுகையைப் பேணிவந்தால் இருலோக
சுகத்தை யடைவீரென்றார் முஹம்மத் அல்

37. கெடுதியகற்றி வைக்கும் தொழுகை
கவலைகள் நீங்குமென்றார் முஹம்மத் அல்

38. சுவனபதி தருவான் றஹ்மான்
தொழுங்களேன் உம்மத்தென்றார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. அஞ்சிப் பயந்தவர்கள் தொழுகையை
அழகாக்கி வைப்பாரென்றார் முஹம்மத் அல்

40. வாரத்தி லோர்விடுத்தன் ஜும்ஆவுக்கு
வரிசையாய்ப் போங்களென்றார் முஹம்மத் அல்

41. தொழுகையை விட்டோர்கள் கியாமத்தில்
தோசிகள் பாவியென்றார் முஹம்மத் அல்

42. ஐந்து வொகுத்தை விட்டோர் கியாமத்தில்
அழுது சலிப்பாரென்றார் முஹம்மத் அல்

43. வல்லவனைப் பணிந்து தொழாதவர்
வஞ்சக ராவரென்றார் முஹம்மத் அல்

44. நரக நெருப்பதனில் எரியாமல்
நன்றாய்த் தொழுங்களென்றார் முஹம்மத் அல்

45. உறுதியுடன் சொன்னேன் தொழுகையை
ஒழுங்கா யெடுங்களென்றார் முஹம்மத் அல்

46. நாலாவது பறுலை உரைக்கிறேன்
நலமாகக் கேளுமென்றார் முஹம்மத் அல்

47. வருடத்தி லோர்மாதம் றமழானில்
தோன்பை பிடிங்களென்றார் முஹம்மத் அல்

48. நான்வைத்த நோன்பிதுகாண் உம்மத்துக்கள்
நீங்களும் வைங்களென்றார் முஹம்மத் அல்

49. அல்லாவின் நன்கொடைகள் இம்மாத
றம்ழானி லென்றுரைத்தார் முஹம்மத் அல்

50. படைத்தோன் பிழைபொறுப்பான் பறுளான
நோன்பைப் பிடிங்களென்றார் முஹம்மத் அல்

51. ஆதி றகுமானுக்காய்ப் பயந்து
அமல்செய்யுங்க ளென்றுரைத்தார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52 றமுழானில் நோன்புவைத்துத் தொழுது
நேராய் நடங்களென்றார் முஹம்மத் அல்

53. நிகரற்ற இரவுகளாம் றமழானில்
நின்றுவணங்கு மென்றார் முஹம்மத் அல்

54. தொழுகைதனை எடுத்தோர் அவர்களின்
தோஷம் தொலையுமென்றார் முஹம்மத் அல்

55 இரவுகளில் விழித்துத் தொழுபவர்
இன்பம் பெறுபவரென றார் முஹம்மத் அல்

56. றப்பு எனக்குத்தந்தான் றமுழானில்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

57. ஆயிரம் மாதத்தைக்காண வைஹறென்று
அல்லாஹுவைத் தானென்றார் முகம்மத் அல்

58. குர் ஆன் இறக்கிவைத்த இரவும்
லைத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

59. ஒருமாத றெமுழானில் இரவொன்று
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

60. மாட்சிமை தங்கிய வோரிரவது
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

61. தௌபா கபூலாகும் றம்ழான்மாதம்
லைலத்துல் கத்ரி என்றார் முஹம்மத் அல்

62 சுவனபதி கேட்டாற் கிடைக்கும்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

63. நரகத்தால் உரிமைவிடும் றமுழானில்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

64. வல்ல றஹுமானின் புகழ்பெற்ற
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. றஹ்மத் திறங்கிடுமாம் றம்ழான் மாதம்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

66. கேளுங்கள் றப்பிடமே கொடுப்பான்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

67. அளவிட முடியாது அருள் தங்கும்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

68. வானவர்கள் புவியில் இறங்குவார்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

69. பூமி மலக்குகளால் நிறைந்திடும்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

70 ஜிபுரீல் கொடிநாலுடன் இறங்குவார்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

71. நாலு இடத்தில் கொடி இறக்குமாம்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

72 மதீனா நபி றௌலாவில் ஓர்கொடி
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

73. பைத்துல் முகத்திசில் கொடியொன்றாம்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

74. மக்கா நகர் கஃபாவிலோர் கொடி
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

75. தூரிசீனா மலையிற் கொடி ஒன்றாம்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

76. சோபனங்கூறி நிற்பார் ஜிபுரீலும்
லைலத்துல் கத்தரியென்றார் முஹம்மத் அல்

77. றஹ்மான் பிழைபொறுக்கு மிரவது
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. ஏன்றமட்டும் விழித்து அமல்செய்யும்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

79. குர் ஆனை ஓதுங்கள் உம்மத்தே
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

80. ஓதுங்கள் இன்னா அன் சல்னாவையும்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

81. சலிமாதிகிர் ஸலவாத்து ஓதுங்கள்
லைலத்துல் கத்ரியென்றார் முஹம்மத் அல்

82. முதல்தன் றஹ்மத்தும் கிருபையும்
முற்பத்தில் கேளுமென்றார் முஹம்மத் அல்

83. றஹ்மானிடம் பிழைகள் பொறுக்க
நடுப்பத்தில் கேளுமென்றார் முஹம்மத் அல்

84. நரகத்தால் மீட்சிபெறப் பிற்பத்தினில்
நாயனைக் கேளுமென்றார் முஹம்மத் அல்

85. பாக்கியத்தை யிழந்தோ ரிம்மாதத்தைப்
பழுதாக்கு வார்களென்றார் முஹம்மத் அல்

86. நலவைப் பின்பற்றியவர் றமுழானில்
நஷ்டமடைந்த யாரென்றார் முஹம்மத் அல்

87. கெட்ட நசீபுடையோர் பறுழுனில்
கெடுதிகள் செய்வாரென்றார் முஹம்மத் அல்

88. அல்லாவுக்காய் நோன்பு பிடித்தோர்க்கு
அதபுகள் செய்ங்களென்றார் முஹம்மத் அல்

89. நோன்புக்குச் சங்கைசெய்தால் கியாமத்தில்
நோய்பிணி தீருமென்றார் முஹம்மத் அல்

90. ஏழை எழியோர்க்கு இரங்குங்கள்
இம்மாத மென்றுரைத்தார் முஹம்மத் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. உகந்து ஸலவாத்தைச் சொன்னோர்க்கு
உதவிகள் செய்றஹ்மான் முஹம்மத் அல்

92. அல்லாஹும்மர் ஹம்னா றஹ்மத்தும்
கிருபையும் செய்றஹ்மான் முஹம்மத் அல்

93. அல்லாஹும் மஃபிர்லனா றஹீம் நீ
ஙங்கள் பிழைபொறுப்பாய் முஹம்மத் அல்

94. அல்லாஹும் மஹதிக்குனா மினன்னார்
காப்பாற்று நரகை விட்டு முஹம்மத் அல்

95. பாடும் ஹஜ்ஜி முஹம்மதின் பிழையைப்
பொறுக்கா துஆவிரப்பீர் முஹம்மத் அல்

96. தாசீம்நபி பொருட்டால் முஹம்மதுக்
காசீமைப்பார் றஹ்மான் முஹம்மத் அல்

97. கஸ்தூரி வாசம்நபி தமக்காய்
ஹக்கனே எம்முகம்பார் முஹம்மத் அல்

98. எல்லாப் புகழதுவும் படைத்த
இறைவ னொருவனுக்கே முஹம்மத் அல்

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு
அலைஹிவஸல்லிம்

(இரண்டாம் பாகம் முற்றிற்று)

கிடைக்குமிடம்:

## றஹ்மத்துல்லாஹ் புத்தகசாலை

பிரபல அறபித் தமிழ் சமய புத்தக வியாபாரிகள்
கிண்ணியா - 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித இஸ்லாத்தின் தத்துவத்தை அறிந்து
இம்மை, மறுமை இரண்டின்
நற்பயன்களைப் பெற சிறந்த இஸ்லாமிய
அறிவு நூல்களைப் படியுங்கள்.

உங்களுக்குத் தேவையான

- ☆ புனித குர் ஆன் சரீபுகள்
- ☆ அறபுக் கிதாபுகள்
- ☆ இஸ்லாமிய அறிவு நூல்கள்
- ☆ தஸ்பீஹ் மணிகள்
- ☆ தொப்பிகள்
- ☆ சுர்மாக்கள், அறபு மைகள்

யாவையும் மொத்தமாகவும் தேவைக்கு ஏற்ப வும் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

# றஹ்மத்துல்லாஹ் புத்தகசாலை

பிரபல அறபிக் தமிழ் சமய புத்தக வியாபாரிகள்

கிண்ணியா - 01.

தொலை பேசி: 026 - 36243

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org